لا إله إلا الله محمد رسول الله إن الدين عند الله الإسلام

# Friday Sermon

*09 November 2018*
*(01 Rabi'ul Awwal 1440 AH)*



## "WE ARE NOTHING WITHOUT ALLAH"

## "அல்லாஹ் இல்லாமல் நாம் எதுவுமில்லை"

(Tamil version - தமிழ் பதிப்பு)

சலாமிற்கு பிறகு தஷஹ்ஹுதும், தஅவுஃகும், அல்ஃபாத்திஹாவும் ஓதிக்கொண்டு **ஹஸ்ரத் கலீஃபத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் தம் ஜுமா பேருரையினை ஆரம்பித்தார்.

இஸ்லாமிய நம்பிக்கையில் வாழும் அன்புக்குரிய சகோதர சகோதரிகளே, அன்பு தோழர்களே! உங்களுடையதோ அல்லது என்னுடையதோ படைப்பு என்பது நமது சொந்த விருப்பப்படி நிகழ்ந்த ஒன்றல்ல. இந்த விரிவான பிரபஞ்சமும் அதில் அடங்கியுள்ள ஒவ்வொரு உயிரினங்களுடைய படைப்பு என்பது, ஒரேயொரு படைப்பாளனின் செயல்களின் விளைவாகும். ஒவ்வொரு உயிரினங்களுக்கும் அதன் படைப்புக்கும் குறிப்பான சில சட்டங்கள் உள்ளன. அல்லாஹ், தனித்தன்மை வாய்ந்த படைப்பாளனாக இருக்கிறான்.

முதலில் படைப்பாளனைத் தவிர, எந்த உயிரினமும் இல்லை. பின்னர் மலக்குகள், ஜீன்கள் மற்றும் மனிதர்களைப் போன்ற உயிரினங்களை உருவாக்க அல்லாஹ் முடிவெடுத்தான். இந்த உயிரினங்களிடையே குறிப்பாக, ஜீன்கள் மற்றும் மனிதர்களைச் சார்ந்த சில உயிரினங்கள் நன்மை செய்கிறது. வேறு சிலர் தீமை செய்கிறது.

அல்லாஹ் கூறுகின்றான்

**“இந்த பகலை அது ஒளி வீசும் போது சான்றாகக் காட்டுகிறேன். ஆணையும் பெண்ணையும் படைத்ததை சான்றாகக் காட்டுகிறேன். நிச்சயமாக உங்கள் முயற்சிகள் வெவ்வேறானவையாகும்”. (92 :35)**

எனவே இப்பூமியில் நிலைநிற்பதற்காக இரவு மற்றும் பகலில் ஆண்களும் பெண்களும் வெவ்வேறு தரப்பட்ட செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர் என்பது உண்மையாகும். அதனால், தீர்ப்பு நாளில் தங்கள் செயல்களுக்கு ஏற்ற விளைவுகளை அவர்கள் எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

**“எவனுடைய நன்மையில் நிறை லேசாக இருக்கின்றதோ அவன் தங்குமிடம் “ஹாவியா” தான் இன்றும் ஹாவியா என்ன என்று உமக்கு அறிவித்தது எது? அது சுட்டெரிக்கும் தீக்கிடங்காகும்” (101 -9,12).**

ஆண் மற்றும் பெண் குறிப்பாக மானிட குலம் அனைத்தும் தங்களது படைப்பாளனிடமான கடமையை நிறைவேற்ற வேண்டும். மிக முக்கியமான கடமை அவனை மட்டும் வணங்க வேண்டும் என்பதாகும். இஸ்லாமிய அடிப்படையில் தனது வாழ்கையை அமைக்க வேண்டும். அதாவது முழுமையாக இறைவனுக்கு கீழ்படிந்து வாழவேண்டும். இதுவே இஸ்லாம். எல்லா நிலையிலும் நேர்மை மற்றும் பயபக்தியுடன் சேவை புரிய வேண்டும்.

அல்லாஹ் கூறுகின்றான்

**“நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன்” (51:57).** அவனுக்கு சேவை செய்வதை விட மேலாக அவர் நிச்சயமாக மனித குலத்திற்கு சேவை புரிய வேண்டும். ஏனெனில் பூமியிலுள்ள ஒவ்வொரு மனிதனிலும் இறை சாராம்சம் குடிக் கொள்கிறது.

அல்லாஹ் கூறுகின்றான்

**“(செவியேற்பவரே!) படிந்திருக்கும் சேற்றிலிருந்து உருவாக்கப்பட்ட ஓசைதரும் காய்ந்த களி மண்ணிலிருந்து நான் மனிதனைப் படைக்கப் போகிறேன் என உமது இறைவன் வானவர்களிடம் கூறிய நேரத்தையும் நினைத்துப்பாரும். நான் அவனை முழுமையாக்கி என் ஆவியை அவனுள் ஊதிய போது நீங்களெல்லாரும் அவனுடன் சிரம் பணிந்து விடுங்கள்”.** (15:29-30)

ஆகவே மனிதகுலத்திற்கு நாம் சேவை புரிவதன் மூலம் நாம் இறை அருகாமையை அடைகிறோம். அதாவது நாம் இறைவனிடம் அதிகமளவு நெருங்கி கொள்கிறோம். நிச்சயமாக நாம் மனிதர்களாகயிருக்கிறோம். அதனால் நாம் முழுமையாக பலவீனமானவர்கள் ஆவோம். இறை உதவி மற்றும் இறை ஆதரவு நமக்கு மிக அவசியமாகும். நாம் பலவீனமானவர்களாகயிருக்கின்றோம். இந்த பிரபஞ்சத்தை கட்டுப்படுத்துவதில் நமக்கு எந்த பங்கும் இல்லை. சூரியனை பூமி சுற்றி வருவதும் நம் கட்டுபாட்டிலில்லை. தட்பவெட்பநிலை மற்றும் நம் ஆரோக்கிய நிலை ஆகியவை நமது கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கவில்லை. நம் வாழ்கையில் நாம் சந்திக்கும் மகிழ்ச்சி மற்றும் துரதிருஷ்டங்கள் மீதும் நமக்கு எந்த பங்குமில்லை. அல்லாஹ் கூறுகின்றான்

**“மக்களே! நீங்கள் அல்லாஹ்விடம் தேவையுடையோர் ஆவீர். ஆனால் அல்லாஹ் தன்னிறைவு பெற்றவனும் புகழுக்குரியவனுமாவான்”** (35: 16)

குத்சியான ஒரு கதீஸில் அல்லாஹ் கூறுகிறான்

**“என் அடியவர்களே! நீங்கள் அனைவரும் வழி கெட்டவர்களாக இருக்கின்றீர்கள். நான் நேர்வழியில் நடத்தியோரைத் தவிர! ஆகவே நீங்கள் என்னிடமிருந்து நேர்வழியினை தேடுங்கள். நான் உங்களுக்கு நேர் வழி காட்டுவேன்”. ( முஸ்லீம், இப்னுமாஜ, திர்மிதி)**

நிச்சயமாக நாம் பலவீனமாகயிருக்கின்றோம். இப்பூமியில் நிலை நிற்பதற்கும், சரியான பாதையில் முன் செல்வதற்கும் நன்மை தரும் ஒரு உலகில் நித்தியமாக நாம் உயிர் வாழ்வதற்கும் நமக்கு அல்லாஹ்வின் உதவி மற்றும் அவனது ஆற்றல் மிக அவசியமாகும்.

அத்தகைய ஒரு நிலையை அடைவதற்கு இவ்வுலகில் நாம் மீக சிறந்த முறையில் செயல்பட வெண்டும். எதிர் காலத்தைப்பற்றிய அறிவு நம் ஆத்மாவுக்கோ நம் உடல் உறுப்புகளுக்கோ இல்லை. அச்சூல்நிலையில் நமக்கு நம் நம்பிக்கை மட்டுமே அடைக்கலமாக உள்ளது. உறுதியான நம்பிக்கையுடன் இருக்க வெண்டும் என்று நமது ஆத்மா நம்மிடம் மன்றாடியவாறு இருக்கிறது. ஏனெனில் இந்த ஆத்மா என்பது இறைவனிடம் தோடர்புடைய ஒன்றாகும். நம் நித்தியமான வாழ்வுக்கு வழிகாட்டியாக அவன் இருக்கிறான். நம் உடலளவிலான ஒழுக்கம் மற்றும் நம் ஆன்மீக உயிர் வாழ்விற்கு அவ்வப்போது இறைவன்பால் அழைக்கும் ஆட்களை அவன் அனுப்பிவைக்கிறான் . அத்தகைய அட்கள் மூலம் எல்லாம் வல்ல இறைவன் மீதான நம்பிக்கையை வலுப்படுத்தவும், இறைவனிடமான உடன்படிக்கைகளை முழுமைப்படுத்தமும் நமக்கு வலியுறுத்தப்படுகிறது.

அவன் பணம் படைத்தவனாகவும் வலிமை மற்று சக்தி வாய்ந்தவனாகவும் இருக்கிறான். ஆனால் மனிதர்களாகிய நாமோ பலவீனமானவர்களும் ஏழைகளுமாக இருக்கிறோம். இறைவனின் உதவி மற்றும் ஆசிர்வாதம் இல்லாமல் இருந்தால் இந்த உலகில் நாம் ஒன்றுமேயில்லை.

நினைவில் வைத்து கொள்ளுங்கள், நீங்கள் எல்லாரும், அதேபோல் நானும் எதுவும் இல்லை என்பதை! அவன்தான், அவன் மட்டும்தான் நம்மைப் படைத்தவன். நம் ஆத்மாக்களையும் அவன்தான் படைத்திருக்கிறான். அதாவது மனிதகுலத்தை பூமியில் படைத்து, அம்மனிதர்களின் உடலில் ஆத்மாக்களை நுழையவைத்ததும் அவன்தான். அதனால்தான் இவ்வுலகினைப் பற்றி நாம் அறிந்திருக்கிறோம். இவ்வுலகில் நம் நிலை நிற்புக்காக நாம் பலவகையிலும் போராடி வருகிறோம். ஆகவே நாம் அவனை மட்டுமே வணங்கவேண்டும். அவன் செய்த இத்தகைய அனைத்து பேருதவிகளுக்கும் நாம் அவனுக்கு மட்டுமே நன்றி செலுத்த வெண்டும்.

உண்மையில் தெய்வீக ஞானம் என்பது, மகத்தான ஒன்றாகும். அல்லாஹ்வின் நிகரற்ற ஞானத்தைப்பற்றியும் அவனது அனைத்து வகைப்பட்ட முடிவுகளை பற்றியும் ஒரு போதும் நமக்கு உணர முடியாது. அல்லாஹ் எல்லாவற்றையும் நமக்கு அளித்திருக்கிறான். அவன் நமக்கு ஒரு மனித உடலைக் கொடுத்திருக்கிறான். அதனால் நமக்கு இவ்வுலகில் வாழ முடிகிறது. அவன் நமக்கு அனைத்து திறனையும் வழங்கியிருக்கிறான். அறிவு, சிந்தனை திறன், மற்றும் உடல் வலிமைய் போன்றவைகளை நமக்கு அவன்

அளித்திருப்பதால்தான் நம் வாழ்கையை முழுமையாக அறிந்தவார் நமக்கு வாழ முடிகிறது.

நாம் அறிவார்ந்த மனிதர்களாகயிருப்பதால், நம்மிடமே இறைவனை எவ்வாறு கண்டு கொள்ளலாம்? நமக்கு சுற்றும் இருக்கும் அவனை எவ்வாறு நமக்கு கண்டு கொள்ளலாம்? நாம் பலவீனராக இருக்கும் போது, அவன் நம்மை பலப்படுத்துகின்றான். நம் தேடல் மற்றும் ஆய்வுகளில் வெற்றிபெற அவனே நமக்கு வழிவகுப்பவனாக இருக்கிறான்.

அல்லாஹ் விளக்கம் தருகிறான் அதாவது உங்களின் தேவைகளை குறித்தும், அவனது ஞானத்தைக் குறித்து. !

**“அல்லாஹ் உங்கள் செவிப்புலனையும் பார்வையையும் போக்கி உங்கள் உள்ளங்களில் முத்திரையிட்டு விட்டால் அல்லாஹ்வையன்றி அதனைத்திருப்பிக் கொண்டு வரும் கடவுள் யார் என்பதையும் சொல்வீர்களா என்று நீர் கேட்பீராக. நாம் வசனங்களை எவ்வாறு மீண்டும் மீண்டும் பல்வேறு கோணத்தில் விளக்குகின்றோம் என்று பார்ப்பீராக ஆனால் இவ்வாறிருந்தும் அவர்கள் புறக்கணிக்கின்றனர்”(6:47)**

**“நீர் கூறுவீராக: அல்லாஹ் உங்கள் மீது இரவை மறுமை நாள் வரை நீடித்திருக்கச் செய்து விட்டால், அல்லாஹ்வையன்றி உங்களுக்கு ஒளியைக் கொண்டுவரும் கடவுள் வேறு யார் என்பதை நீங்கள் எனக்கு தெரிவியுங்கள். நீங்கள் கவனமாகக் கேடபதில்லையா?”**(28 :72 )

அல்லாஹ்வின் அனுமதியின்றி எதையும் பிறர் நமக்கு வழங்க முடியாது. அவன் விரும்புகின்றவர்களை அவன் கண்ணியப்படுத்துகின்றான். அவன் விரும்புகின்றவர்களுக்கு பணிவுடன் நடக்கும் குணத்தை வழங்குகிறான். நமது பார்க்கும் திறனையும் கேட்கும் திறனையும் அவன் திரும்ப எடுத்துக் கொண்டால் உடல் அளவிலும் ஆன்மீக அளவிலுமான இத்தகைய குருட்டு மனப்பான்மை மற்றும் செவிடினை குணப்படுத்த அல்லாஹ்வைத் தவிர வேறு எவருக்கும் முடியாது. அவன் எல்லையற்றவனாகயிருக்கின்றான். அவன் நம்மிடம் அவனை மட்டும் வணங்குவதற்கு கட்டளையிடுகிறான். அதை நாம் பின்பற்றுவதன் மூலம் நாம் அவனையும், அவன் நம்மையும் நெருங்கிவிடுகிறோம்.

நமது பல்வகையான ஊனங்களிலிருந்தும் அவன் நம்மை பாதுகாக்கிறான். அல்லாஹ் இரக்கமுடையவனாகவும்

நற்பண்புடையவனாகவும் இருக்கின்றான். ஆற்றல் மற்றும் அருளினை பெற விரும்புகின்றோர்கள் அவன் முன் பணிவுடன் இருங்கள். இப்பணிவானது உங்களை ஆகாயத்தில் உயர்த்திக் கொள்கிறது. அதாவது அல்லாஹ் எவ்வாறு தனது நிலையை உயர்த்துகிறான் என்பதை அவர் கண்டுக் கொள்வார். உண்மையில் அவர் இறை அன்பினை அறுவடை செய்வார். பௌதீகமாக மண்ணுலகிலும் ஆன்மீகமாக விண்ணுலகிலும் உண்மையான வெற்றியினை அடைவது தன்மை படைத்தவனுக்கு கீழ் பணிவதன் மூலமாகும்.

நீங்கள் அவனுக்கு முன்பாக மட்டும் குனிந்து. தாழ்மையுடன் இருங்கள். அவ்வாறேயானால், அவன் தனது இரக்கத்தின் கதவினை உங்களுக்காக திறந்து வைப்பான். மட்டுமின்றி பூமியிலும் ஆகாயத்திலும் ஆயிரக்கணக்கான அதிசயங்களை அவன் உங்களுக்கு வெளிப்படுத்திக் காட்டுவான். நீங்கள் நேர்வழியில் முன் செல்லுங்கள். இவ்வுலக சாத்தான்களை எதிர்த்து போராடுங்கள். ஒவ்வொரு காலமும் அவன்தன் தூதர்களை அனுப்பிக் கொண்டிருப்பான். அத்தகைய தூதர்களை நீங்கள் பின்பற்றி, அவர்களுக்கு கீழ் பணிவதன் மூலம் இவ்வுலகிலும் மறுவுலகிலும் நீங்கள் அருளுக்குரியவர்களாவீர்கள். உங்கள் மனித பலவீனங்களை நீக்கி, அதற்க்கு பதிலாக ஆன்மீக ஆவியை அளித்து அவன் உங்களை பலப்படுத்துவான். ஆனால் அல்லாஹ் உங்களிடம் இல்லையென்றால், உங்களிடம் எதுவும் இல்லை. அந்நிலையில் நீங்கள் ஏமாற்றத்தின் பள்ளத்தாக்கில் வீழ்ந்து விடுவீர்கள்.

அல்லஹ் உங்களிடம் இரக்கம் காட்டட்டும். அவன் தனது திருப்தியின் வழியை உங்களுக்கு திறந்து தரட்டும். ஆமீன். நீங்கள் உங்களின் பலவீனங்களை வெல்லுங்கள். ஆன்மீக ஆற்றலை பெறுங்கள். அல்லாஹுவுக்கும் அவனுடைய தூதருக்கும் கீழ்படியுங்கள். அது மூலம் நங்கள் உங்களின் ஆன்மாவுக்கு உணவளியுங்கள். பயபத்தியுடனும், ஞானமுடனும், விடா முயற்சியுடனும் நீங்கள் உங்களின் கடமைகளை பூரணமாக பூர்த்தி செய்யுங்கள். உங்கள் சுமைகளையாவும் இறைவனிடம் ஒப்படையுங்கள். உங்களின் வாழ்கையின் ஒவ்வொரு துறையிலும் அல்லா்ஹ் உங்கள் கூடவே இருக்கிறான் என்பதை உறுதிப் படுத்துங்கள். இன்ஷா உல்லாஹ் ஆமீன்.

**Translated by:**
*Azim Ahmad (Naib Amir)*
Ph: 7339689239

# ISSUED BY

**R. JAMALUDDIN RAOTHER SAHIB**
*Amir Kerala South Zone, India*
**Kerala Contact No: 9447001832**

**SIRAJ DEEN SAHIB**
*Amir Tamil Nadu State, India*
**Tamil Nadu Contact No: 7502272774**

## NATIONAL AND INTERNATIONAL

**MUKARRAM SALEEM SAHIB**
**SAHIB** *(Naib Amir Tamil Nadu)*
**Tamil Nadu and National Level**
**Contact No: 8903398355**

**MUKARRAM FAZIL JAMAL**
*(Naib Amir Delhi)*
**National and International Level**
**Contact No: 9711237484**
**Blog:** www.sahih-al-islam.blogspot.in

**PUBLISHED BY:**
JAMAAT-UL-SAHIH-AL-ISLAM
KALIYAKKAVILAI BRANCH
(TAMILNADU AND KERALA BORDER)
Ph No: 9789180817, 9171977109